Agricultural Engineering Unit for Dharmapuri

* 697 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state--

(*a*) whether there is any proposal to open a new Agricultural Engineering Unit at Dharmapuri ; and

(*c*) if so, when it will be opened ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தர்மபுரியில் புதிய வேளாண்மைப் பொறியியல் துணைக் கோட்டம் ஒன்று அமைப்பதற்கு ஏற்கெனவே அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய துணைக்கோட்டத்திற்கு நியமிக்கப்பட்ட வேளாண்மை உதவிப் பொறியாளர் ஒருவர் 25–2–1970-ல் பதவி ஏற்றார். இப்புதிய துணைக் கோட்டம் விரைவில் செயல்படத் தொடங்கும்.

THIRU B. VENKATASWAMY : Eventhough the Dharmapuri District was separated from the Salem District three years ago, the Agricultural Engineering section has not yet started functioning in the Dharmapuri District. So, will the Government come forward to issue strict orders for the opening of an Engineering Section in the Dharmapuri District immediately ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தர்மபுரி மாவட்டத்திற்குத்தான் இந்தப் புதிய துணைக்கோட்டம் இப்பொழுது துவங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். சேலத்திலிருந்து அவர்கள் வந்து ஆக்கபூர்வமான பணிகளை அவர்களால் செய்ய முடியவில்லை. அதன் காரணமாகத் தான் தருமபுரியில் உருவாகியிருக்கிறது. அதற்குள்ள சில பணியாளர்களையும் அரசாங்கம் நியமித்திருக்கிறது. சில புதிய பணியாளர்களையும் ஏற்கெனவே பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் சிலரையும் மாற்றி அமைத்தும் ஏற்பாடு செய்து, விரைவிலே இது பணியாற்றத் தொடங்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : A major portion of the Dharmapuri District is full of hard rock. Recently the Andhra Government introduced rigs which are very useful for digging wells. Wells can be dug within two or three days with one rig. Will this Government come forward to sanction one or two such rigs for Dharmapuri District ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் விவசாய மானியக்கோரிக்கை விவாதத்தின் பொழுது சொல்லும்பொழுது கூட ரூ. 25 லட்சத்திற்கு புதிய ரிக்குகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னேன். அந்த ரிக்குகள் பல இடங்களுக்கும் கொடுக்கப்படும். நிச்சயம் ஹோசூருக்கும் கொடுக்கப்படும்.

சேத்தியாதோப்பு துணைப் பதிவாளர் அலுவலகத்துக்குக் கட்டடம்.

*698. **வினா—திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தாலூக்கா சேத்தியா தோப்பு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு சர்க்கார் கட்டடம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : இல்லை.